# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1


வணக்கம்,

இந்த செய்திமடலை, நாட்டின் பல பகுதிகளிலிருக்கும் அப்யாசிகள் படிக்கிறார்கள் என்பது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. மண்டலங்களிலிருந்து வரும் கட்டுரைகள் அதிகரித்துள்ளன. செய்திகளைத் தொகுத்தளிப்பதில் எங்களுக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மாஸ்டருக்கு அதிக வேலை இருந்தது. அவர் நாடு முழுவதும் பயணித்துக் கொண்டிருக்கிறார். இந்த இதழை தொகுத்து முடிக்கும் தருணத்தில் அவர் வட இந்திய பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

பூஜ்ய லாலாஜி மகராஜ் அவர்களின் பிறந்த தின விழாக்கள், Zic/CiC கருத்தரங்குகள், அப்யாசி பயிற்சி வகுப்புகள், VBSE பயிற்சி வகுப்புகள், மற்றும் பெங்களூரில் நடந்த இளைஞர்கள் கருத்தரங்கு ஆகியவை இந்த இதழில் இடம் பெற்றிக்கும் சில செய்திகளாகும். 'மையங்களின் ஒளி' பகுதியில் ஷாஜஹான்பூர் ஆசிரமச் செய்தி இடம் பெற்றுள்ளது. விஸ்பர்ஸ் ப்ரம் த பிரைட்டர் வேர்ல்ட் (Whispers fro Brighter World) பகுதி-2 ஏப்ரல்-30 அன்று வெளிடப்படுகிறது. இது மாஸ்டரிடமிருந்து வரும் மற்றொரு பரிசாகும்.

மே-2009 இதழுக்கான கட்டுரைகளை 15-ஏப்ரல்-2009 க்குள் எங்களுக்குக் கிடைக்கப் பெறுமாறு அனுப்புங்கள். அனைத்து கட்டுரைகளும் மற்றும் நிகழ்ச்சிகள் குறித்த புகைப்படங்களும், உங்களுடைய zic யின் வழியாக எங்களுக்கு அனுப்புங்கள்.

இப்படிக்கு

செய்திமடல் குழு

## மாஸ்டரின் பயணம் - ஜனவரி, பிப்ரவரி 2009

பொங்கல் பண்டிகையின் போது மாஸ்டர் சென்னையில் இருந்தார். பல அப்யாசிகள் இந்த விடுமுறையின் போது மணப்பாக்கம் ஆசிரமம் வந்திருந்தனர். இந்த பண்டிகைக்காலத்தில் மாஸ்டர் பல திருமணங்களை நடத்தி வைத்தார். ஜனவரி-19 அன்று அவர் ராமாபுரம் சென்றார். (1991-ல் இங்கிருக்கும் ஆசிரமத்தை அவர் திறந்து வைத்தார்) சத்சங்கத்திற்குப் பிறகு, சித்தூருக்குச் சென்றார். அங்கு குழுமியிருந்த 1100 அப்யாசிகளுக்கு மாஸ்டர் சத்சங்கம் அளித்தார். சத்சங்கத்திற்குப் பிறகு, மாஸ்டரின் குடிலை திறந்து வைத்தார். ஒரு தனிப்பட்ட உரையாடலில், இறப்பைக் குறித்துப்பேசும் போது, அது மக்கள், ரயிலில் பயணிப்பது போன்றது என்றார். ரயிலில் சிலர் இறங்குவதும், புதிதாக சிலர் ஏறுவதுமாக இருப்பார்கள். அவர்கள் யாரைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. அதைப்போல, நம் உறவினரோ, நண்பரோ இறந்தால், அந்த இறப்பால் அப்யாசிகளின் உள் அமைதியையும், பரிசுத்தத்தையும் பாதிக்காத வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

சிறிது நேர ஓய்விற்குப்பின், மாஸ்டர் மாலையில் மீண்டும் ஒரு சத்சங்கம் அளித்தார். பிறகு அவர் உரையாற்றியதில், "மக்கள் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக தியானம் செய்ய வேண்டும்" என்றார். 20-அன்று, காலை சத்சங்கம் அளித்த பிறகு திருப்பதி சென்றார்.

திருப்பதி சென்றடைந்தபின், அங்கு குழுமியிருந்த 1500 அப்யாசிகளுக்கு மாஸ்டர் சத்சங்கம் அளித்து, உரையாற்றினார். காட்டேஜில் மாஸ்டர் மிக மகிழ்ச்சியாக இருந்தார். எக்கோஸ் இந்தியா - ஜனவரி 2009 செய்திமடலில் இருந்த புகைப்படத்தைப் பார்த்துப் பழைய நினைவுகளில் திளைத்தார். மதிய உணவிற்குப் பின் சித்தூர் சென்று, மறுநாள் காலை சென்னை வந்தார்.










23-ஜனவரி மாஸ்டர் அகமதாபாத் வந்தார். 24-அன்று அதலஜ் (Adalaj) ஆசிரமத்தின் தியான மண்டபத்திற்குள் மாஸ்டர் நுழையும் போது அங்கிருந்த அப்யாசிகள் மிக அமைதியாக அமர்ந்திருந்தனர். சத்சங்கத்திற்குப் பிறகு சகோ.ரஞ்சனா மேத்தாவின் இனிமையான பஜன்கள் இருந்தன. மாஸ்டர் ஓய்வாக இருப்பார் என்று எதிர்பார்த்த நேரத்தில், தான் இங்கிருக்கும் போது, ஐந்து சத்சங்கங்கள் அளிப்பதாக அறிவித்தார். அது, அப்யாசிகளுக்கும், மிஷன் பொறுப்பிலிருப்பவர்களுக்கும் மிஷன் வேலைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற செய்தியைத் தெளிவாக சொல்வதாக இருந்தது. மற்றும் நம் ஆன்மீக வாழ்க்கையின் முக்கியத்தை உணர்த்துவதாகவும் இருந்தது.




26-அன்று காலை சத்சங்கத்திற்குப் பிறகு, குஜராத் இளைஞர்களின் கர்பா (Garba) மற்றும் ராஸ் (Ras) நடனங்களைப் பார்த்தார். பிறகு, குஜராத் மற்றும் அருகிலிருக்கும் மாநிலங்களிலிருந்து வந்திருந்த 140 பிரசெப்டகர்களுடன் கூட்டம் நடந்தது. அதில் மாஸ்டர் சத்சங்கம் அளித்து உரையாற்றினார். அவர் களைப்புடன் இருந்தார். சிறிது ஓய்வெடுத்தபின், மாலையை அவர் அமைதியாகக் கழித்தார்.

27-அன்று, மதியம் மாஸ்டர் டெல்லி வந்தார். 28-அன்று, மண்டல ஆசிரமத்தில் சத்சங்கம் அளித்தார். பல மையங்களிலிருந்தும் 2500 அப்யாசிகள் வந்திருந்தனர். சத்சங்கத்தில் ஒரு அப்யாசியின் செல்போன் ஒலித்தது. சத்சங்கத்திற்குப் பின், யாருடைய செல்போன் ஒலித்தது என்று மாஸ்டர் கேட்டு, அந்த அப்யாசியை மேடைக்கு அருகே அழைத்து, அங்கிருந்த அனைத்து அப்யாசிகளிடமும் மன்னிப்புக் கேட்கச் சொன்னார். 29 அன்று காலை சத்கோலுக்குப் புறப்பட்டார்.



ஜனவரி-29 அன்று, மாஸ்டர் மொராதாபாத் சென்றார். நூற்றுக்கணக்கான அப்யாசிகள் சாலையின் இருபுறமும் நின்று மாஸ்டரைக் கண்டனர். அன்று இரவு, மாஸ்டர் ருத்ராபூரில் தங்கினார். 30-அன்று காலை உணவிற்குப்பின் சத்கோல் சென்றார்.

சத்கோலில் மாஸ்டரை பாடலுடன் வரவேற்றனர். மிகக் கடினமான பயணமாக இருந்தாலும் மாஸ்டர் அப்யாசிகளுடன் உற்சாகமாக உரையாற்றி கனிவுடன் விசாரித்தார். இந்து கால அட்டவணைப்படி ஜனவரி-31 பூஜ்ய லாலாஜி மகராஜ் அவர்களின் பிறந்த தினமாகும். "மிகவும் புனிதமான பசந்த் (Basant) என்றார். ஒரு அப்யாசி மலைப்பகுதியில் உபயோகப்படுத்தும் தொப்பியைப் பரிசளித்தார். மிக மகிழ்ச்சியுடன் தொப்பியை அணிந்து, அவ்வப்போது சரி செய்து கொண்டிருந்தார்.





பிப்ரவரி-1 அன்று மாஸ்டர், விவேகானந்தர் நினைவகத்திற்குப் புகழ் பெற்ற அல்மோரா என்ற ஊருக்குச் சென்றார். "1958ல், நான் சகஜ மார்க்கத்தில் சேருவதற்கு ஆறு வருடங்களுக்கு முன், இங்கு தியானம் செய்திருக்கிறேன். சுவாமி விவேகானந்தர் காலடி வைத்த அதே இடத்தில்தான் என்று உறுதியாக நினைக்கிறேன்" என்றார். ஒரு அப்யாசி வீட்டில் மதிய உணவிற்குப் பின், காத்திருந்த சில அப்யாசிகளுடன் சிறிது நேரம் கழித்தார். ஒரு மாணவன் "எது மிக முக்கியம்? படிப்பா அல்லது தியானமா என்று கேட்டார். "ஒரு மாணவன் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்" என்றார். ஒரு சகோதரி, தன் கணவனை எப்படி தியானத்தில் சேர வைப்பது என்று கேட்டார். "கட்டாயப்படுத்த வேண்டாம். பயிற்சியினால் ஒரு சிறந்த முழுமையான (perfect) மனிதனாக மாறினால், உன் கணவர் உன்னைப் போல ஆக விரும்புவார்" என்று கூறினார்.




மேலை நாட்டு அட்டவணைப்படி, பிப்ரவரி-2 பூஜ்ய லாலாஜி அவர்களின் பிறந்தநாள் சத்சங்கத்திற்கு பின், உடனடியாக ஒரு அப்யாசி வேறு வேலையில் ஈடுபடுவதை பார்த்தார். "நாம், நம்முடைய நிலையை (Condition) ஆழ்ந்து கவனிக்க வேண்டும். சத்சங்கத்திற்கு பிறகு உடனடியாக வேறு வேலைகளை ஆரம்பிக்க கூடாது" என்றார். லாலாஜி மகராஜ் அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய குறுந்தகடு (DVD) வெளியிட்டார். சகஜ மார்க்க பரம்பரையைக் குறித்த நாடகத்தை மாஸ்டர் ரசித்தார். "விஸ்பர்ஸ் (Whispers) பகுதி-2, 3 குறித்து, அறிவித்து உரையாற்றினார். பிப்ரவரி-3 அன்று மாஸ்டர் நவ்குசியாதல் (Naukuchiatal) சென்றார். "கோபத்துடன் காணப்படும் நபர்களைத் தவிர்க்கவேண்டும். துறவிகள் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும். சரியான நபரின் மேல் விசுவாசமும், சரியான நேரத்தில், நேர்மையும், ஒருமைப்பாடும், ஆன்மீகத்தை வளர்ப்பதற்குத் தேவையாகும்" என்றார்.




பிப்ரவரி-5 அன்று ஹாபூர் ஆசிரமத்தைத் திறந்து வைத்தார். பிப்ரவரி-7 அன்று சோனிபத் ஆசிரமத்தைத் திறந்து வைத்தார். மிக மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். சத்சங்கத்திற்குப்பின் உரையாற்றினார். அதில், "மௌனம் கடவுளின் மொழி. அன்புக்கு மொழியே இல்லை. ஒழுக்கமில்லாமல் அன்பு இல்லை. ஆன்மீகமில்லாமல் ஒழுக்கம் இல்லை" என்றார். "அன்புக்கு உருவமோ மதமோ இல்லை. வேறுபாடுகளை நீக்கினால் மட்டுமே உலகளாவிய சகோதரத்துவமும், அன்பும் நம் இதயங்களில் ஏற்றப்படும்" என்றார். சகோ. குருப்ரீத், சில வழிபாட்டுப் பாடல்களை இனிமையாகப் பாடினார்.

பிப்ரவரி-8 அன்று மாஸ்டர் ஜெய்பூர் வந்தார். மாஸ்டரைக் காண்பதற்காக, அப்யாசிகள் வரிசையாக நின்றிருந்தனர். மாஸ்டரைப் பார்த்ததும் அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சி. 10-அன்று காலை, மாஸ்டர் வருவதற்கு முன்பே அமர்ந்திருந்த 2300 அப்யாசிகளுக்கு அவர் சத்சங்கம் அளித்தார். சில அப்யாசிகள் தங்கள் குழந்தைகளுக்கு பெயரிடுவதற்காக வந்திருந்தனர். சாதியின் பெயரையோ, வேறு பெயரையோ, தான் வைத்த பெயரில் சேர்க்கக் கூடாது என்ற விதிமுறையுடன் பெயர் வைப்பதாகக் கூறினார். தன் கணவர் மிஷனில் இல்லை என்ற சகோதரியிடம் "உன் கணவர் வருவார். எதிர்மறையான எண்ணங்கள் தாமதப்படுத்தும். நீ உன்னுடன் உன் கணவரை அழைத்து வரவேண்டும்" என்றார்.



11-ம் தேதி காலை சத்சங்கத்தில் பின் மகாபாரதத்திலிருந்து, "குறிக்கோள்" என்ற நாடகம் நடத்தப்பட்டது. ஒரு உரையாடலின் போது "முன்னரே விதிக்கப்பட்ட வாழ்க்கை என்று ஒன்று இல்லை. எதுவும் நடக்கலாம். ஆனால் எது நடக்கும் என்பது நம்முடைய மனோசக்தியை (Will) பொறுத்தது" என்றார்.

மாஸ்டர் 12-ம் தேதி மதியம் ஜெய்பூரிலிருந்து டெல்லி மண்டல ஆசிரமத்திற்கு வந்தார். மாலையில் சத்சங்கம் அளித்தார். அந்த இடம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. முதன்முறையாக அன்று இரவு மாஸ்டர் காட்டேஜில் தங்கினார். காலையில் சத்சங்கம் அளித்தபின், மதியம் போபால் சென்றார். போபாலில் 15-பிப்ரவரி அன்று தியான மண்டபத்தை திறந்து வைத்தார். போபாலிலிருந்து 15 கி.மீ தொலைவிலிருக்கும் ஆதம்பூர் சோனி என்ற கிராமத்தில் ஆசிரமம் உள்ளது. சத்சங்கதிற்கு பின் இரண்டு திருமணங்களை நடத்தி வைத்தார், பிறகு சாலை வழியாக இந்தோர் சென்றார். 16-அன்று இந்தோர் ஆசிரமத்திலிருக்கும் தியான மண்டபத்தை திறந்து வைத்தார். சகோ. அஜய் பட்டர் உரையாற்றினார். "மாஸ்டரை குறிக்கோளாகக் கொண்டு தியானத்திற்காவும், அவரை நமக்குள் காணுவதற்காவும் ஆசிரமத்தை உபயோகிக்க வேண்டும்" என்றார். "இனி வரும் காலங்களில் மிக அதிகமானோர், ஆன்மீகத்தை ஏற்றுக் கொள்வார்கள்" என்றார். ஆசிரமம், சுமார் 800 பேர் அமரும்படியாக, ஊருக்குள் அமைந்துள்ளது. 18-அன்று, காலை மாஸ்டர் மும்பை சென்றார். அங்கு ஒருநாள் இருந்தார். 19-அன்று, மேலும் பல இடங்களுக்கு செல்வதற்கு முன், சிறிது ஓய்விற்காக கொல்கத்தா சென்றார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
H.Q. News
ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1

## கட்டுரைப் போட்டி முடிவுகள்





நாடு முழுவதிலிருந்து சுமார் 75000 மாணவர்கள் பங்கேற்ற 2008 கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. ஹிந்தி, தமிழ், மற்றும் பல மண்டல மொழிகளிலும் போட்டி நடந்தது. இளநிலைக்கான தலைப்பு, “உண்மையே தைரியம்”. முதுநிலைக்கான தலைப்பு “சுய மரியாதையும், தன்னம்பிக்கையும், குணத்தை உருவாக்கும்”. இளநிலை-ஆங்கிலப்பகுதியில் வெற்றி பெற்றவர்கள் - ஆகான்ஷா (பூனா), அமல் (டெல்லி), சுஷ்மா (ஐதராபாத்), அர்ஜுன் (வடகரா, கேரளா), தேபோப்ரிய (ரான்ச்சி), திவ்யா (காஜிப்பூர், U.P), நைனா (மொஹாலி), சானிகா (நாசிக்), சித்தாந்த் (ஷக்தி நகர்)

முதுநிலை-ஆங்கிலப்பகுதியில் வெற்றி பெற்றவர்கள் - அனுராதா (நைனிதால்), நரேஷ் (ஜெய்ப்பூர்) சமினா (இந்த்தோர்), அனுப் (நாமக்கல்,T.N), திவ்யா (நொய்டா), ஈஷிகா (குல்லு, H.P), கீர்தன் (சென்னை), ஸ்நேஹல் (பூனா), அருண் (ஜலந்தர்)




# NEW PUBLICATIONS

### லாலாஜியின் வாழ்க்கை - குறுந்தகடு தொகுப்பு மற்றும் புத்தகம்




பூஜ்ய லாலாஜி மகராஜ் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி, “லாலாஜியின் வாழ்க்கை” என்ற குறுந்தகடு தொகுப்பை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். லாலாஜி மகராஜ் அவர்களின் வாழ்க்கை மற்றும் போதனைகளைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படத்தை பூனா அப்யாசிகள், பல வருடங்களுக்கு முன்பு, தயாரித்து, நடித்து ஒளி நாடாவாக வெளிட்டனர். இத்திரைப்படத்திற்கு இருந்த மிகுந்த வரவேற்பு காரணமாக, அழகான குறுந்தகடு தொகுப்பும் மற்றும் லாலாஜி மகராஜ் அவர்களின் சில அரிய புகைப்படங்களுடன், புத்தகமும், மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது.




### சகஜ மார்க்க அறிமுகக் கையேடு

இந்தக் கையேடு, ஆன்மீக ஆர்வலர்களுக்கு, சகஜ மார்க்க தியானத்தைப் பற்றிய ஒரு நல்ல அறிமுகமாக அமையும். சகஜ மார்க்கத்தில் சேர விரும்புவர்களுடன் பகிர்ந்து கொள்ள, இந்த அறிமுகக் கையேடு சிபாரிசு செய்யப்படுகிறது. இதில், சகஜ மார்க்கத்தின் முக்கிய அம்சங்கள் மற்றும் உள்ளூர் தொடர்பைப் பற்றிய தகவல், ஆகியவை உள்ளன. சகஜ மார்க்க தகவல் நிகழ்ச்சிகளில் இதைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## இந்தியாவில் மிஷனின் வேலைகள் பற்றிய ஒரு ஆய்வு



தமிழ்நாட்டின் அறுவடைத் திருநாளான பொங்கலுக்கு ஒரு வாரம் முன்பு சென்னையிலுள்ள பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தில் பல வேலைகள் நடந்தன. இந்தியாவில் உள்ள அனைத்து பகுதிகளிலிருந்தும், 200 பேர் கொண்ட மிஷன் பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மண்டல பொறுப்பாளகள், மையப் பொறுப்பாளர்கள், தங்கள் பணிகள் குறித்த ஆய்விற்காக 3 நாட்கள் - 10-12 ஜனவரி கூடினர்.

ஜனவரி 10 அன்று, மாஸ்டர் மண்டலப் பொறுப்பாளர்களுக்கு உரையாற்றினார். மறுநாள் அனைவருக்கும் உரையாற்றினார். இரண்டு உரைகளிலும், மாஸ்டர் ஒழுக்கத்தின் தரம் குறைந்து வருவது பற்றிக் கவலைப்பட்டார். “ஒழுக்கம் இல்லையெனில், மிஷனின் உறுப்பினாராக தொடரமுடியாது. பாபூஜி வருத்தத்துடன் 1966-ல் அப்யாசிகளை சாதி, மதங்களைத் தாண்டி இணைப்பதில், தான் தோல்வியுற்றதாகக் கூறினார். நாற்பது வருடங்களுக்கு பிறகும் மிஷனில் சாதி வேறுபாடுகள் மறையவில்லை” என்றார்.

“மாஸ்டரை தெய்வீக வழியில் அன்பு செலுத்த முடியவில்லை எனினும், அவருக்கு சேவை செய்வதின் வழியாக, அவருடைய கருணையை ஈர்க்க முடியும். அதுவே நமக்கு அமைந்த சுலபமான வழியாகும்” என்றார்.

நம்மிடம் தெரியும்படியான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்ற மாஸ்டரின் கணிப்பு கேட்பதற்கு வருத்தமாக இருந்தது. இது குறித்து மாஸ்டர், அடிக்கடி தனது உரைகளிலும், குறிப்புகளிலும் தெரிவித்து வருகிறார்.

மையப் பொறுப்பாளர்களுக்காக நடந்த பயிற்சி அரங்குகளில், மையங்களின் நிர்வாகம், கணக்கிடுதல், வெளியிடுகள், பாதுகாப்பு, உறுப்பினர் பதவி நிர்வாகம் போன்றவை தொகுத்து அளிக்கப்பட்டன. பங்கேற்றவர்கள், தொகுத்து அளித்தவர்களிடம், பயனுள்ளதாக உரையாடி, தங்கள் சந்தேகங்களை தெளிவு செய்துகொண்டனர். இப்பயிற்சி இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



## விசேஷ வெளியீடுகள்


'விஸ்பர்ஸ் ப்ரம் த ப்ரைட்டர் வேர்ல்ட்- இரண்டாவது பாகம்' ஏப்ரல்-30-2009 அன்று வெளியிடப்படும்.

தன்னார்வத்துடன் தரக்கூடிய நன்கொடைத் தொகைக்கு, இந்த விசேஷ பதிப்பு, நமக்கு கிடைக்குமாறு மாஸ்டர் செய்திருக்கிறார். மேலும் தகவலுக்கு, உங்கள் உள்ளூர் SRCM நிர்வாகியை அணுகவும்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா

Zonal Activities

ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1



# பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜின் பிறந்தநாள் விழா

## ஆலுவா கேரளா

ஆலுவா மையத்தில் பிறந்தநாள் முழு நாள் விழாவாக காலை 9 மணி, மற்றும் மாலை 5 மணி சத்சங்கத்துடன் கொண்டாடப்பட்டது. பூஜ்யஸ்ரீ லாலாஜி பற்றிய குறும்படம், அவரது வாழ்க்கை எவ்வாறு அவர் திருவாய் மலர்ந்தருளிய சகஜ மார்க்க கொள்கைகளுடன் ஒன்றியிருந்தது. என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. இக்குறும்படம் ஹிந்தியில் இருந்ததால் அவ்வப்பொழுது மலையாளத்தில், அனைவருக்கும் புரியும் வண்ணம் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது. இது, விழாவின் முக்கிய நோக்கமான 'மாஸ்டரின்பால் நிலையான நினைவு' கொள்ளுதலில் ஒவ்வொரு அப்யாசிக்கும் உதவி செய்தது

## குல்பர்கா, கர்நாடகா

குல்பர்கா மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் சுமார் 280 அப்யாசிகளும், 70 குழந்தைகளும் முழுநாள் விழாவில் கலந்து கொண்டனர். முதல் நாளிலிருந்தே அப்யாசிகள் வரத் தொடங்கினர். அவர்களுக்கு உறைவிடமும், உணவும் அளிக்கப்பட்டது. 2/02/09 அன்று காலை 9 மணி சத்சங்கத்துடன் விழா ஆரம்பித்தது. காலை உணவிற்குப் பின் லாலாஜி மகராஜின் வாழ்க்கை பற்றிய குறும்படம் காட்டப்பட்டது. மதிய உணவிற்குபின் குழந்தைகளின் பாட்டு கவிதை, மற்றும் அப்யாசிகளின் பக்தி பாடல்கள் முதலான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலை 5 மணிக்கு சத்சங்கம் நடைபெற்றது. பல அப்யாசிகள் நாள் முழுவதும் அருமையான அருட்சூழலை உணர்ந்ததாக கூறினர். எல்லா அப்யாசிகளும் அன்புடன் கூடிய இந்த எளிய நிகழ்ச்சிகளை மிகவும் பாராட்டினர்.

## விஜிடி ,ஆந்திரபிரதேசம்

குண்டூர் மாவட்டம் , காஸிப்பேட்டையில் புதிதாக வாங்கப்பட்டுள்ள 50 ஏக்கர் பிராந்திய ஆசிரமத்தில், விழா கொண்டாடப்பட்டது. சுற்றியிருக்கும் உப கிளைகளிலிருந்து சுமார் 1000 அப்யாசிகள் மற்றும் குழந்தைகள் விழாவில் கலந்துகொண்டனர்.

காலை சத்சங்கத்திற்க்குப் பின் பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜின் வாழ்க்கை சரிதம் மற்றும் அவரது போதனைகள் படிக்கப்பெற்றன. குழந்தைகளால், ஓவியம் தீட்டுதல், இசைத்தல், சகஜ மார்க்கத்தின் சாரத்தைப்பற்றிய சிறு நாடகம், முதலியன வழங்கப்பெற்றன.. இந்நாடகம், அடுத்த தலைமுறை மீது சகஜ மார்க்கத்தின் தாக்கம், மற்றும் அதன் மூலம் நிச்சயமான ஆன்மீக முன்னேற்றம் ஏற்படும் என்பதைப்பற்றி தெளிவாக எடுத்துக்காட்டியது.

இணைச்செயலாளர் சகோ.ஏ.பி.துரை இவ்விழாவில் கலந்துகொண்டு அப்யாசிகளுக்கு ஊக்கமளித்தார். அவர் மாலை சத்சங்கத்தை நடத்திய பின், பிரசெப்டர் கலந்துரையாடலுக்கு தலைமை வகித்தார்

## கட்டக், ஒரிஸ்ஸா

ஒரிஸ்ஸாவின் அனைத்து மையங்களையும் சேர்ந்த சுமார் 160 அப்யாசிகளால் இருதினவிழா கொண்டாடப்பட்டது.

பிப்ரவரி 1ஆம் தேதியன்று, சத்சங்கத்திற்குப்பின், மாஸ்டரின் சொற்பொழிவுகளிலிருந்து, மிஷனின் வளர்ச்சி, உலகளாவிய தேக்கநிலையின் தாக்கம், மிஷனின் செயல்பாடுகளை இன்னும் மேம்படுத்துவது மற்றும் அதிக அளவில் அப்யாசிகளைப் பங்கேற்கச் செய்வது போன்றவை பற்றிய முக்கியமான குறிப்புகள் விவாதிக்கப்பட்டன.

பிப்ரவரி 2ஆம் தேதியன்று, சத்சங்கத்தைத்தொடர்ந்து, சாதனையின் முக்கிய அம்சம் என்று லாலாஜி வலியுறுத்தி உள்ள கொள்கைகள் பற்றிய உரை இருந்தது. சுயஒழுக்கம், பிரதிஉபகாரம் பாராமல் மற்றவர்க்கு உதவுவது, நம்மைச் செம்மைப்படுத்தும் மாஸ்டரின் பணியில் நாமெவ்வாரு ஒத்துழைப்பது போன்றவை கலந்துரையாடப்பட்டன.

அப்யாசிகள், மாஸ்டர், மற்றும் மிஷன்மீது எவ்வாறு நம்பிக்கையை வளர்த்துக்கொள்வது, எவ்வாறு சுயபரிசோதனை செய்துகொள்வது என்பவைபற்றிய சுய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மாலையில் இளைய அப்யாசிகள், குழந்தைகள் கலைநிகழ்ச்சி நடந்தது. அங்கு இருந்த தெய்வீகச்சூழலால் அனைவரும் பயனடைந்தனர்.

## மும்பை, மஹாராஷ்டிரா

மும்பை மைய அப்யாசிகள், பெருமளவில், உற்சாகத்துடன் விழாவில் பங்கேற்றனர். ஞாயிறு காலை சத்சங்கம் ஆனபின், பஜன்கள் பாடப்பெற்றன. லாலாஜியின் வாழ்க்கைச்சரிதம் படிக்கப்பட்டது. அவர் போதனைகளிலிருந்து, "அப்யாசியின் கடமைகள்" என்பது பற்றி உரையாடப்பட்டது. பிற்பகலில், இளைய அப்யாசிகள் நடத்திய "மத்திய கிழக்கு நாடுகளின் சூஃபி மகான்கள்" என்ற நாடகம் சிந்தனையைத் தூண்டியது.

பிப்ரவரி 2ஆம் தேதி, காலை தியானத்திற்குப் பிறகு, சகோதரிகளின் பஜனும், குழந்தைகளின் நாடகமும் இருந்தன. லாலாஜியின் போதனைகளின் சாரம் மனதில் பதியும் வண்ணம், அவரது வாழ்க்கைச் சரிதம் படமாகக் காண்பிக்கப்பட்டது. அனைவராலும் உணரப்பட்ட, தெய்வீகப் பிரசன்னம் நிறைந்திருந்த இவ்விழா, மாலை சத்சங்கத்துடன் முடிவடைந்தது.

## அஹமத்நகர், மஹராஷ்டிரா

இப்புனித நன்னாளில் மஹராஷ்டிராவின் பல மையங்களிலிருந்து, சுமார் 216 அப்யாசிகள் விழாவில் பங்கேற்றனர். சத்சங்கத்திற்குப்பின், பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜை நினைவு கூறும் விதமாக, பஜனைகள், சொற்பொழிவுகள், குழந்தைகளின் சிறு நாடகங்கள் ஆகியவை நடைபெற்றன.

அஹமத்நகர் மற்றும் சுற்றியுள்ள இடங்களிலிருக்கும், ஆன்மீக ஈடுபாடு கொண்டவர்களுக்கு, ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது. சகோ.R.D.குல்கர்னி, ஷீர்வல் மற்றும் சகோதரி கலா, சதாரா இதை முன்னின்று நடதினார்கள்.

சகோ.சுபாஷ் வைத்யா தம்முடிவுரையில், நாம் மாஸ்டரிம் இருந்து பெறும் அனைத்தையும், திறந்தமனதுடன் அனைவரிடமும் பகிர்ந்துகொண்டால், மாஸ்டரின் அருளை எப்பொழுதும் பெறலாம் என்று கூறினார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
Zonal Activities
ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1





## தியான கூடம் திறப்பு விழா --- வல்ஸாட், குஜராத்

பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜின் பிறந்த நாளை ஒட்டி சகோ. C.ராஜகோபாலனால் வல்ஸாடில் தியான கூடம் திறந்துவைக்கப்பட்டது. இப்பொழுது முதல் ஞாயிறு சத்சங்கங்கள் இங்கு நடைபெறவுள்ளது. தெற்கு குஜராத்தின் வெவ்வேறு கிளைகளிலிருந்து சுமார் 300 அப்யாசிகள் கலந்துகொண்டனர். இவ்விழாவில் பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜ் பற்றிய ஒளித்தகடுகள் காட்டப்பட்டன. அப்யாசிகளின் பேச்சுக்களும் பிரசெப்டர்களின் கூட்டத்தொடரும் நடைபெற்றன.

ஒன்றரை ஏக்கர் நிலத்தில் பரந்துள்ள இந்த ஆசிரமம் வல்ஸாட்--தரம்பூர் மாநில சாலையிலிருந்து சிறிது தூரத்திலும், மும்பை--தில்லி தேசிய நெடுஞ்சாலை எண்: 8 லிருந்து 4 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. தியான கூடம் சுமார் 250 அப்யாசிகள் பங்கேற்கும்படி உருவாக்கப்பட்டது. இது தவிர, ஒரு குழந்தைகள் மையமும், பாதுகாப்பு செவ்வகமும், பண்டகசாலையும், கழிப்பறைகளும் உள்ளன.

வல்ஸாத்தில் நடந்த இவ்விழாவிற்கு முன் சூரத், நவ்சாரி, வாபி போன்ற மையங்களில் சத்சங்கங்கள், அதன் பின் பேச்சுக்கள், வினா விடை போன்றவை நடைபெற்று வந்தன.

## தியானப் பயிற்சியாளர்கள் பயிற்சி முகாம் - (PTP-BATCH1)

தெற்கு தமிழ் நாடு, 2Bகேந்திரம் உள்ளடக்கிய 46 தியானப் பயிற்சியாளர்களின் முதல் பயிற்சி முகாம் மலம்புழா புத்துணர்ச்சி மையத்தில் நடைபெற்றது.

ஆன்மீக பயிற்சியாளருக்கான முக்கிய தகுதிகள், அவரின் பணிகள், குழுத்திறன், இசைந்திருத்தல் போன்றவை அலசப்பட்டன. இவை மிகுந்த கவனத்துடனும், அன்புடனும் தயார் செய்து அளிக்கப்பட்டன.

பயிற்சியாளர்களின் உண்மையான உழைப்பாலும், பிரசெப்டர்கள் கவனத்தோடு உள்வாங்கியதாலும், இந்த முகாம் மிகச்சிறப்பாக அமைந்ததை யாவரும் உணர்ந்தனர்.

மலம்புழா புத்துணர்ச்சி மையத்தின் சூழலும், வசதிகளும் பங்கேற்றவர்கள் இருப்பதால், இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது.

இந்த நிகழ்ச்சி காலை, மதிய உணவு, மற்றும் தேநீர் நேரம் உள்ளடக்கி சுமார் 10 மணி நேரம் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடை பெற்ற இந்த முகாம் மிகச்சிறப்புடன் அமையக் காரணமான மாஸ்டரின் அன்பு, அனுமதி, மற்றும் பிரசன்னத்தை உணர்ந்து அனைவரும் உளமார நன்றி செலுத்தினர்.

## கேரளா தியானப் பயிற்சியாளர்களின் கருத்தரங்கு--- ஆலுவா

அனைத்துக்கேரள தியானப் பயிற்சியாளர்களின் கருத்தரங்கு ஆலுவாவில் 31/1/09 to 1/02/09 ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது. கேந்திர பொறுப்பாளர் சகோ. K.U. மோகன் தலைமை வகித்தார். சென்னையில் நடைபெற்ற பிராந்திய மற்றும் கிளை பொறுப்பாளர்களின் கருத்தரங்கத்தில் கலந்துரையாடல் செய்த பல்வேறு அம்சங்களை பரிமாறிக் கொள்ளும் விதமாக இது அமைந்தது. இந்த கருத்தரங்கும், சென்னைக் கருத்தரங்கைப் பின்பற்றி அமைந்தது.

மூன்று அங்கத்தினர்கள், ஒவ்வொருவரும் 11 விஷயங்களைப் பற்றி பேசினர். அவற்றில் மையப்பொறுப்பாளரின் கடமைகள், நன்னெறி உருவாக்குதல், ஆசிரம வேலைகள், SRCM திருமணங்கள், புத்தக விற்பனை மற்றும் பதிப்பு , பாதுகாப்பு, கணக்குவழக்கு முதலியன அடங்கின. மிஷன் வேலை செய்பவர்களுக்கு, தன் அறிவை மேம்படுத்திக்கொள்ளவும், அதன் மூலம் வேலையில் நாட்டம் கொள்வதற்கும் இக் கருத்தரங்கு உதவிற்று.

## வடகர்நாடக தியானப் பயிற்சியாளர்களின்



## கருத்தரங்கு

வட கர்நாடக மையம் 25/12/08 அன்று குல்பர்காவில், தியானப் பயிற்சியாளர்களுக்கான ஒரு கருத்தரங்கு நடத்தியது. 30 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். மையப் பொறுப்பாளர் சகோ. ராஜு கஷம்பூர்கர் சொற்பொழிவாற்றினார். மிஷன் வேலைகளின் செயல்பாடு, குழுவின் ஒருங்கிணைந்த விவாதம், வினா-விடை போன்றவை இடம் பெற்றன. இதன் பின் மையத்தின் நடவடிக்கைகள் பற்றிய ஒரு விவாதத்தில், பொது மக்களுடன் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தல், அப்யாசி பயிற்சி திட்டம், முழுநாள் நிகழ்ச்சிக்கு திட்டமிடுதல், அருகிலுள்ள கிளைகளின் அப்யாசிகளுக்கான தனி அமர்வுக்கு (Individual sitting) அட்டவணை தயாரித்தல், அறிக்கை சமர்ப்பித்தல் போன்றவை அலசப்பட்டன.

மாலையில் தியானப் பயிற்சியாளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயங்கள் கொண்ட மாஸ்டரின் ஒலித்தகடு ஒலிபரப்பப்பட்டது. இக்கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என யாவரும் உணர்ந்தனர். 6 மாதத்திற்கு ஒருமுறை கருத்தரங்கு நடைபெற வேண்டினர்.



"ஒரு தனி மனிதனுக்கும், அவனுள் இருக்கும் கடவுளுக்கும் இடையே இருக்கும் ஒரே ஒரு விஷயம், (E-G-O), EGO, அவனது அகந்தையாகும்.அதனைக் கைவிட்டு, சரணாகதி அடையும் போது, நாம் அந்த இடத்தில் கடவுளைப்(G-O-D)பெறுகிறோம்."
---சாரிஜி.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
Zonal Activities
ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1

## அப்யாசிகளுக்கான நன்னெறி பயிற்சி முகாம்



அஸ்ஸாம், திக்பாய் கேந்திரம் ஜனவரி 4ம் தேதி அன்று ஒரு பயிற்சி முகாமிற்கு ஏற்பாடு செய்திருந்தது. தின்சுகியா, தேஜ்பூர், ஜோர்ஹட், ஷிப்சாகர், தூலியாஜன், நாஹர்கடியா, திப்ரூகர், டும்டுமா போன்ற அஸ்ஸாம், மற்றும் அருணாசல பிரதேசங்களிலிருந்து, சுமார் 200 அப்யாசிகள் கலந்து கொண்டனர். மாஸ்டர் அவர்களின் சமீபத்திய சொற்பொழிவுகளின்படி, அப்யாசிகள் நன்னெறிகளை வளர்த்துக்கொள்தலின் முக்கியத்துவம் முதன்மையான உட்கருத்தாக வலியுறுத்தப்பட்டது. கௌஹாத்தி கிளை சகோ. அசோக் சென்குப்தா பேசுகையில், பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜ் மொழிந்ததிலிருந்து "ஒருவர் ஆன்மீக நிலையில் எவ்வளவு தான் உயர்ந்திருந்தாலும், அவர் ஒழுக்கமற்றவராயின், ஆன்மீகத்தின் மூச்சுக்காற்று கூட அவரை அண்டியதில்லை" என்பதை மேற்கோள் காட்டினார். மாஸ்டர் நம் ஆன்மீக வளர்ச்சிக்கு பொறுப்பேற்கிறார், ஆனால் நம்மை நன்னெறி படுத்திக்கொள்வது நமது பொறுப்பு மட்டுமே என்று வலியுறுத்தப்பட்டது. பாபூஜி மஹாராஜின் "உனக்கு நீ உண்மையாக இரு" என்ற தத்துவம், நன்னெறியை நம்முள் வளரச்செய்யும் என தெளிவு செய்யப்பட்டது. அதன் பின் வினா--விடை நிகழ்ச்சி, இளைய அப்யாசிகளால் நடத்தப்பட்டது. அது பார்வையாளர்கள் அனைவரிடையேயும் தம்மை அறிவதற்கான ஒரு புது தெம்பை உருவாக்கியது.

## பத்ராவதி, கர்நாடகா

சர். M. விஸ்வேஸ்வரையாவால் சுதந்திரத்திற்கு முன் 1922ம் ஆண்டு நிறுவிய முதல் எஃகு தொழிற்சாலை அமைந்த பத்ராவதி நகரில் மிஷனின் முதலாவது விழா பிப். 2ம் தேதியன்று நடைபெற்றது.

ஆகஸ்ட் 2008ல் 3 அப்யாசிகளுடன் தொடங்கிய இந்த மையம், மாஸ்டரின் அருளாலும், அப்பகுதியைச் சேர்ந்த அப்யாசிகளாலும், தன்னார்வத் தொண்டர்களாலும் மற்றும் ஷிமோகா, திப்தூர், பெங்களூரு முதலிய இடங்களலிருந்து முறையாக வருகை புரியும் பிரசெப்டர்களாலும் இப்பொழுது 30 அப்யாசிகளைக் கொண்டிருக்கிறது.

.இவ்விழா சகோதரி நாகமணி அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. உள்ளூர் அப்யாசிகளால் உணவளிக்கப்பட்டது. பெங்களூரு பிரசெப்டர்கள் சகோ. பிரமோத், சகோதரி ரூபா இருவரும் முழு நாள் நிகழ்ச்சி நடத்தினர். பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜ் பற்றிய குறும்படம் காண்பிக்கப்பட்டது. பயிற்சிமுறையைப் பற்றிய ஒரு கலந்துரையாடலும், மாஸ்டர்களின் பொன்மொழிகளைக் கொண்டு ஒரு சைகை விளையாட்டும் நடைபெற்றன. இவை பங்கேற்ற அப்யாசிகளை நாள் முழுவதும் தங்கச்செய்தது. இள தன்னார்வ தொண்டர்களின் ஈடுபாட்டைக் காணவும், இப் புதுக் கிளையில் விழா எடுக்கும் அப்யாசிகளின் முனைப்பைக் காணவும் மிக மகிழ்ச்சியாக இருந்தது.

## இளைஞர் கருத்தரங்கு-எதிர்காலத்திற்கு தயாராகுதல்



பெங்களூரில் உறைவிடத்தோடு கூடிய மூன்று நாள் கருத்தரங்கு ஜன. 24-26 தேதிகளில் இளைய சமுதாய அப்யாசிகளுக்காக நடத்தப்பட்டது. இதில் 18-35 வயதுக்குட்பட்ட, சுமார் 25 அப்யாசிகள் பங்கேற்றனர். ஒவ்வொரு நாளும் காலை சத்சங்கத்துடன் ஆரம்பித்து, பேச்சுக்கள், தேர்ந்தெடுத்த தலைப்புகளில் விவாதித்தல், மாலை தன்னார்வ பணி புரிவது வரை செயல்கள் வரையறுக்கபட்டன.

முதல் நாளில், நன்னெறி முன்னேற்றம், கூட்டு உழைப்பு, சகோதரத்துவம், சகஜ மார்க்கத்தின் அடிப்படை தத்துவம் முதலியவை ஒருமுனைப்படுத்தப்பட்டன.

இரண்டாம் நாள் மிஷனின் பல்வேறு செயல்பாடுகள் பற்றி விளக்கப்பட்டது. இதன் பின் அப்யாசிகள், தனக்கு இணக்கமான தொண்டுகளில் பங்கேற்க ஆர்வம் காட்டியதுமட்டுமின்றி , உடனடியாக பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர்.

மூன்றாம் நாள் அப்யாசிகள், தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர். மாஸ்டரின் தாக்கம் அவ்வனுபவங்களில் எல்லாம் ஒரு ஆதாரமாக உணரப்பட்டது.

இக்கருத்தரங்கில் சிறு நாடகங்கள், குழுப்பணியை ஊக்குவிக்கும் விளையாட்டுக்கள், ஆன்மீகசெறிவுடன் கூடிய ஒளிச்சித்திரங்கள் முதலியனவும் இடம் பெற்றன.

இளய சமுதாயத்தை சென்றடைய ஒரு முக்கிய பாதை உருவாவதைப் பார்க்க முடிந்தது. மிகுந்த ஆர்வமும், மிஷனின் பணிகள் ஆற்றுவதில் ஈடுபாடும் கொண்ட இச்சமுதாயத்தின் ஆற்றலை வழிப்படுத்தி, சரியான இலக்கை நோக்கி செலுத்துவதில் உதவிபுரிவது மிகவும் அவசியமான ஒன்று.

## அப்யாசி பயிற்சி முகாம், சந்த்ரபூர் (மஹாராஷ்ட்ரா)

பயிற்சி முறை சீரானதாகவும், சிறப்பானதாகவும் அமைதலின் முக்கியத்துவத்தை நினைவு படுத்தும் பொருட்டு, சந்த்ரபூரில் (மஹாராஷ்ட்ரா) ஹிந்தியில் ஒரு பயிற்சி முகாம் 28/12/08 அன்று நடத்தப்பட்டது. சகஜ மார்க்கத்தின் கோட்பாடு, பயிற்சி முறை பற்றி விளக்கமளிப்பது இதன் நோக்கம். காலை சத்சங்கத்திற்குப்பின் மாஸ்டர் ஹிந்தியில் அளித்த "Ishwar se sambandh jodo" ( இறைவனுடன் உறவு ஏற்படுத்து ) என்ற குறுந்தகடு ஒளிபரப்பப் பெற்றது. மனித வாழ்க்கையின் குறிக்கோள், குருவின் பங்கு, பிரார்த்தனை, தியானம், சுத்தகரிப்பு, நாட்குறிப்பு எழுதுவதின் முக்கியத்துவம் போன்றவைகளைப் பற்றி சொற்பொழிவுகள் நடந்தன. பிற்பகலில், அப்யாசிகள் சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்களை பற்றி தத்தம் எண்ணங்களை கூறினர். அதன் பின், சாதனை முனைப்பு, மற்றும் சரியான அணுகுமுறை அப்யாசிகளிடம் எவ்வாறுள்ளது என்பதைக் கண்டறிய, ஒரு வினாத்தாள் வினியோகிக்கப்பட்டது. மாலை சத்சங்கத்துடன் முகாம் முடிவுற்றது.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
Zonal Activities
ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1





## ஔரங்காபாத்தில் குழந்தைகளுக்கான பயிற்சிமுகாம்

ஜனவரி 18ந் தேதி அன்று, ஔரங்காபாத்தில் குழந்தைகளுக்கான ஒருநாள் பயிற்சி முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வாழ்க்கையை வாழ ஒருநல்லவழி, அறிவுபூர்வமான செய்திகள், மற்றும் வேடிக்கைகள்பல நிறைந்த அந்நாளை அநுபவிக்க, ஐந்திலிருந்து பன்னிரண்டு வயதிற்குட்பட்ட இருபத்திரண்டு குழந்தைகள் ஒன்று கூடினர். பிரார்த்தனையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. அதன் பிறகு ஓவியப் போட்டி நடை பெற்றது. பின்பு, சிறப்பானதொரு கலந்துரையாடல் நடந்தது. அதில் குழந்தைகள், இயற்கைச் சக்திகள் மற்றும் அவற்றின் ஒப்பற்ற தன்மைகள் பற்றிக் கண்டறிந்து, விளக்கினர். குழந்தைகள் அனைவரும் நன்கு கலந்து பழகிய விதம் மனதிற்கு மகிழ்ச்சி ஊட்டுவதாக இருந்தது. நம்பிக்கை, விடாமுயற்சி, மற்றும் நன்றியுணர்ச்சி போன்ற நன்னெறிகளைப் பற்றிய கதைகள் கூறப்பட்டன.

## VBSE---- ஆசிரியர் மேம்பாட்டுக்கு உதவி----ராஞ்சி

ஜனவரி 3-4 தேதிகளில், ராஞ்சியில், மாநில அளவிலான இரண்டுநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. ஜார்கண்ட் மாநிலத்தில், VBSEன் செயல்திறனை தீவிரப்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் நோக்கம் ஆகும். கொல்கத்தாவிலிருந்து வந்திருந்த சகோ.அருண்தவே, சகோதரி லீலா தவே, மற்றும் மண்டலப்பொறுப்பாளர் டாக்டர் G.M.பட்நாகர், சகோ.அருண்குமார் லால், மற்றும் சகோ.மனோஜ் திவாரி ஆகியோர்களால் நடத்தபெற்ற இந்நிகழ்ச்சியில் சுமார் 59 பிரதிநிதிகள் பங்கேற்றனர். VBSE திட்டத்தை எவ்வாறு வடிவமைத்து வழங்குவது என்பது பற்றி அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். VBSE செயல் முறை எடுத்துகொள்ளப்படாத பல மையங்களுக்கு இந் நிகழ்ச்சி மிகவும் உதவியாக இருந்தது.

நமக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், நன்னெறி எண்ணங்களைப் பரப்புவதைப்பற்றியதே இந்நிகழ்ச்சி என்று தெளிவுறுத்தப்பட்டது. VBSE பாடத்திட்டம் மற்றும் அதன் பல செயல்பாடுகள், பள்ளிகளுக்கு மட்டுமே இருந்தாலும், அத்துடன் அது நின்றுவிடாமல், ஒரு அப்யாசியின் வாழ்க்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் விரிவானமுறையில் பயன்படுத்தப்படவேண்டும். VBSE நிகழ்ச்சி, அனைவரையும் அடையும் வண்ணம் செய்யும் ஆசிரியர்களை எவ்வாறு ஊக்குவிப்பது, என்பது பற்றிய தன் கருத்துக்களை அனைவரிடமும் பகிர்ந்துகொண்ட சகோ.தாவே எல்லோரையும் ஆன்மீகப்பாதைக்கு நாம் மெதுவாக வழிநடத்திச் செல்லவேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார்.

சொற்பொழிவு ஆற்றுவதற்கான சிலகுறிப்புகள், யோசனைகளை சகோதரி லீனா கூறினார். சகோ.மனோஜ் அவர்கள், சமநிலைவாழ்வு மற்றும் தன்நிலைமுன்னேற்றம் பற்றியும் விவரித்தார். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள், தாங்கள் விரும்பித்தேர்ந்தெடுத்த விஷயம் பற்றி உரை நிகழ்த்தினர். பேச்சாற்றல் மூலம் தொடர்புகொள்ளும் திறமையை எவ்வாறு விருத்தி செய்து கொள்வது என்பது பற்றி அவர்களுக்கு விளக்கபட்டது.

மையத்தின் வருங்கால செயல்பாடுகளைப்பற்றி தீர்மானிக்க நடத்தப்பட்ட கூட்டத்தில், VBSE பற்றிய அறிமுகமானது, கதைகள், புதுமையான பரிசோதனைகள் மூலம் மேலும் ஈர்க்கத்தக்க வகையில் ஆக்கப்படவேண்டும் என்ற எண்ணம் தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு மையத்திற்கும் இரண்டு குறுந்தகடுகளைக்கொண்ட ஒரு ஆசிரியர் பயிற்சிப்பெட்டகம் அளிக்கப்பட்டது.



## மன அழுத்தக் கட்டுப்பாடும் சமநிலை வளர்ச்சியும்

மத்தியப்பிரதேசம், இந்தூரில் உள்ள குரு தத்தாத்ரேயா தொழில்நுட்பப்பயிற்சிநிலையம், (GDIT), இந்தூர் பல்கலைக்கழகம் மற்றும் இந்தூரில் இருந்து 200கி.மீ. தொலைவில் உள்ள ராஜ்கட் மையம் போன்ற இடங்களில் வரவேற்புக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. நிகழ்ச்சிகளுக்கான விஷயம் 'மன அழுத்தக்கட்டுப்பாடும் சமநிலை வளர்ச்சியும்' என்பதாகும். மன அழுத்தம் என்பது, இயற்கை நமக்குக் காட்டும் ஒரு அறிவிப்பு என்று அறிந்துகொள்ளவும், நமது செயல்பாடுகளை சீரமைத்துக் கொள்ளத் தேவையான சரியான வழிமுறைகளைக் கொடுக்கவும், ஆன்மீகம் மிகவும் அவசியம் என்று தெளிவாகக் கூறப்பட்டது.

முன்கூட்டியே நாம் வைத்துக்கொள்ளும் எண்ணங்களும், தவறான எண்ணங்களும், நாம் சரியான முறையில் செயல்படுவதற்குத் தடையாக இருக்கலாம். நமது உள் மற்றும் வெளித்தேவைகளை சமநிலைப்படுத்துவதற்கு ஆன்மீகம் நமக்கு உதவுதிறது.

சகஜ மார்க்கம் பற்றிய ஒரு அறிமுகம் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டது. GDITயில், 200 மாணவர்களும், 30 ஆசிரியர்களும் நிகழ்ச்சிக்கு வருகை புரிந்திருந்தனர். ராஜ்கட் அப்யாசிகள், அருகில் உள்ள கில்சிபூர், குராபார், மற்றும் பயோரா போன்ற மையங்களுடன் இணைந்து கூட்டத்தற்கு ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சிக்கு வந்திருந்த சுமார் 120 பேர்களில், 35 பேர் பயிற்சிமுறையை ஆரம்பித்துள்ளனர். மொரீனாவில் நடந்த மற்றுமொரு வரவேற்புக்கூட்டத்திற்கு வந்திருந்த 83 பேர்களில், 33 பேர் பயிற்சியை ஆரம்பிக்க தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

## பொறிஇயல் கல்லூரி மாணவர்களுக்கு சகஜ மார்க்க அறிமுகம் - சோலாபூர்

சோலாபூர் அரசாங்க மருத்துவக்கல்லூரியில் உள்ள அப்யாசி மாணவர்கள், ஜனவரி 19 மற்றும் 20ந்தேதிகளில், B.I.G. பொறிஇயல் கல்லூரி மாணவர்களுக்கு சகஜ மார்க்கம் பற்றிய அறிமுகத்தை அளித்தனர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் சுமார் 300 மாணவர்கள் வந்திருந்தனர். பொதுவாக தியானத்தின் பயன், அதன் அவசியம், மற்றும் குறிப்பாக நம் சகஜ மார்க்க தியானமுறை பற்றி, மாணவர் சமுதாயத்திற்கு, நமது சகஜ மார்க்க இளம் பேச்சாளர்கள் மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்தனர். மிகவும் தீர்மானமாகவும், தங்கள் சுய அனுபவத்திலிருந்தும் தம் வயதை ஒத்தவர்கள் பேசியதால், அதை அம்மாணவர்கள் முழுமையாக எற்றுக்கொண்டதைக் காண முடிந்தது. சொற்பொழிவுகளைத் தொடர்ந்து வினா-விடைப்பகுதி நடைபெற்றது. அதன் பலனாக சுமார் 126 மாணவர்கள் தியானப் பயிற்சியை ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்தனர். மாணவர்களுக்கு அடிப்படை அறிமுகப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. மேலும் அதிகமாக ஊக்கம் காண்பித்தவர்களுக்கு, கல்லூரி நிர்வாக உதவியுடன், விடுதி வளாகத்தில் அறிமுக சிட்டிங்குகள் கொடுக்க எற்பாடு செய்யபட்டது. இங்கு கிடைத்த மிகச்சிறந்த வரவேற்பானது, சோலாப்புரில் உள்ள மற்றுமொரு பொறிஇயல் கல்லூரியான BN தொழில்நுட்ப கல்லூரியை அணுகத் தூண்டுகோலாக இருந்தது. அவர்களும் எங்கள் யோசனைக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். நம் அன்புக்குரிய மாஸ்டருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், 'செய்யும் பணிக்கான வெகுமதி, மேலும் கிடைக்கும் பணியே' என்று நம் தொண்டர்கள் இதை எற்றுக் கொண்டுள்ளனர்.

## அப்யாசிகளுடன் இணைந்து செயல்படுதல்



சென்னையில் பதிவு செய்து கொண்டுள்ள, சுமார் 8500 அப்யாசிகளில், சுமார் 2500 உள்ளூர் அப்யாசிகள், மணப்பாக்கம் ஆசிரமத்தில் ஞாயிறு அன்று நடைபெறும் சத்சங்கத்தில் பங்கேற்கிறார்கள். சென்னை குரோம்பேட்டை உபமையத்தில், டிசம்பர் 28ந்தேதி அன்று, ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பதிவு செய்துள்ள அப்யாசிகளுக்கு, முன்னதாகவே அழைப்பு விடுத்து இருந்ததால், சுமார் நூற்று இருபது அப்யாசிகள் வந்திருந்தனர். நிகழ்ச்சியில் இடம் பெற்ற இரு சிற்றுரைகளுள் ஒன்றில், தியானப்பயிற்சி முறை பற்றி ஒரு உள்ளூர் பிரிசெப்டரும், மற்றொன்றில், சகஜ மார்க்கத்தில் தனக்கு ஏற்பட்ட அநுபவங்கள் மற்றும் தியானப் பயிற்சியால் தான் பெற்ற பயன்கள் பற்றி ஒரு சகோதரி அப்யாசியும் உரையாற்றினார்கள். இதனை அடுத்து நடைபெற்ற ஒரு வினா விடைப்பகுதி, பல சந்தேகங்களைத் தெளிவுபடுத்தவும், தியானப் பயிற்சியைப் பற்றி மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், ஒழுங்கான பயிற்சிமுறை மூலம் எவ்வாறு பயன் பெறலாம் என்பதை வலியுறுத்தவும் மிகவும் உதவியது. இந்த இரண்டு மணி நேர நிகழ்ச்சியானது, சத்சங்கத்துடன் நிறைவுற்றது.

'விற்பனைக்குப்பின் சேவை' என்ற எண்ணத்தின் தேவையை, மாஸ்டர் திரும்பத் திரும்ப வலியுறுத்தி இருக்கிறார். ஒவ்வொரு அப்யாசியும் தன் உள் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பயிற்சியை ஆரம்பிக்கிறார். அந்த அப்யாசி பயிற்சி முறையில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள உதவுவது, சேவையின் ஒரு முக்கிய அங்கம் ஆகும். இந்நிகழ்ச்சியின் மூலம் அது சிறப்பாகச் செயலாக்கப்பட்டது.

## ஆன்மீக வாழ்க்கையின் அடிப்படையாக தனி மனிதனின் குணம்

சகோதரர் அஜய் பட்டர் உருவாக்கம் செய்த, மேற்கூறிய கருத்தினை அடிப்படையாகக்கொண்ட சிறப்பு பயிற்சி நிகழ்ச்சி ஒன்று, முப்பது முதல் ஐம்பது வயது வரை உள்ள அப்யாசிகளுக்கு, 2008 டிசம்பர் 13 ,14 ஆகிய இரு தினங்களில், பன்வேல் பாபுஜி மெமோரியல் ஆசிரமத்தில் நடைபெற்றது.

2008, அக்டோபர் மாதம் புனேயில் நடந்த இளைஞர் மாநாட்டின் வெற்றியானது, புதிய அப்யாசிகளுக்கும் அதே மாதிரியான நிகழ்ச்சி ஒன்றினை, பன்வேலில் நடத்த ஊக்குவித்தது. சொற்பொழிவுகள், பலதரப்பட்ட செயல்பாடுகள், நாடகம், வினா விடை, விளையாட்டுக்கள், போன்றவற்றின் ஒரு கலவையாக அந்நிகழ்ச்சி இருந்தது. "அவரை மட்டும் பார்க்கவும்", "நற்குணம் வாழ்க்கையைக் காக்கும்", "சகோதரத்துவம்", "உன்னில் சகஜ மார்க்கம் வெளிப்படட்டும்", "தகுதி பெற சேவை செய்", போன்ற விஷயங்களைப் பற்றிய கருத்துரைகள் வழங்கப்பட்டன. புனே மற்றும் நாசிக் அருகில் உள்ள மையங்களில் இருந்து வந்திருந்த அப்யாசிகளும் கலந்து கொண்டனர். ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ச்சிகள் நடந்ததுடன், சுய சிந்தனை, குறிப்பேடு எழுதுதல் போன்றவைகளுக்கும் போதிய அவகாசம் இருந்தது. சகோதரர் அஜய் பட்டருடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்பட்ட அனைத்து தலைப்புகளும், ஒன்றுடன் ஒன்று இணைந்து, ஒரு விஷயமானது அடுத்த விஷயத்திற்கு வழி வகுப்பதாக இருந்தது. அப்யாசிகள் முழுவதுமாக ஈர்க்கப்பட்ட நிலையில், இரண்டு நாளானது மிகவும் குறைவான நேரமாகத் தோன்றியது. அடிக்கடி இம்மாதிரியான நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும் என்ற கருத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

## நிலக்கரி மண்டலப் பகுதியில் நடந்த கூட்டம்--- வட ஆந்திர மாநிலம்

பொதுவாக , நிலக்கரி மண்டலம் எனக் கூறப்படும் வட ஆந்திர மாநிலத்தில், சுமார் ஐம்பது கி.மீ தொலைவின் உள்ளே, நம் மிஷனின் பல மையங்கள் அமைந்துள்ளன. நம் அப்யாசிகளாக உள்ள, நிலக்கரிச் சுரங்க அதிகாரிகள் பலர் உதவியுடன், இந்த மையங்களில் உள்ள ஆசிரமங்கள், சில காலம் முன்பு கட்டப்பட்டன. இப்பல மையங்களுக்கும் மத்தியில் ஜெய்பூர் உள்ளது. அங்கு ஆசிரமம், மற்றும் அதனைச் சுற்றி அப்யாசிகளின் குடியிருப்புப் பகுதிக்காகத் திட்டமிடப்பட்டுள்ள, 10.5 ஏக்கர் நிலம் உள்ளது.

ஜனவரி 25, ஞாயிறு அன்று, மன்செரியல் என்னும் இடத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற முதல் சத்சங்கத்தில், அருகில் இருந்து வந்த சுமார் இருநூறு அப்யாசிகள் பங்கேற்றனர். வட ஆந்திர மாநில மண்டலப் பொறுப்பாளர் உள்ளிட்ட சில அப்யாசிகள், ஹைதராபாத்தில் இருந்து வந்து இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மன்செரியலை அடுத்து, கோலெட்டி என்னும் புது மையத்தில், ஒரு கூட்டம் நடைபெற்றது. மிகக் குறுகிய கால அளவில், இந்த மையத்தில், 20 அப்யாசிகள் சேர்ந்துள்ளனர். உள்ளூர் நிலக்கரிச்சுரங்க அதிகாரிகளின் சிறந்த ஆதரவு ஊக்கமளிப்பதாக உள்ளது. மிஷனின் செயல்பாடுகளுக்காக, அவர்கள் ஒரு பழைய கட்டிடத்தைச் சீரமைத்து வருகின்றனர். கோலெட்டியில் சத்சங்கம் முடிந்த பிறகு, சில அப்யாசிகள் ஒருகுழுவாக, பெலாம்பள்ளி ஆசிரமத்திற்குச் சென்றனர். அங்கு நடைபெற்ற சத்சங்கத்திற்கு, 80க்கும் மேலான அப்யாசிகள் வந்திருந்தனர். கோலெட்டியில் இருந்து பயணித்தவர்கள், கோதாவரிக்கனி என்னும் இடத்தில் இரவு தங்கினர்.

அடுத்த நாளான ஜனவரி 26ஆம்தேதி, கோதாவரிக்கனி ஆசிரமத்தில் காலை 6:30 மணி சத்சங்கத்துடன் தொடங்கியது. காலை உணவிற்குப் பிறகு, அக்குழுவினர், கோதாவரி நதியின் வடக்கே உள்ள, ஜெய்பூர் ஆசிரம நிலம் உள்ள இடத்திற்குச் சென்றனர். அரசு,வேம்பு ஆகிய மரங்களின் நிழலில், மிகவும் இயற்கையான சூழலில், காலை 10:00க்கு சத்சங்கம் நடைபெற்றது. அந்த இடம் முழுவதிலும் மாஸ்டரின் தெய்வீகப் ப்ரசன்னம் உணரப்பட்டது.

### ஜம்முவில் பயிற்சி முகாம்

பலதரப்பட்ட மக்களுக்கும், சகஜமார்க்கத்தைப் பற்றி எடுத்துரைக்கத் தேவையான பேச்சாளர்களைத் தேர்ந்தெடுக்க, 3நாள் பயிற்சி முகாம் ஒன்று, 2008, டிசம்பர் 27 ந்தேதி ஜம்முவில் நடைபெற்றது. ஜம்மு காஷ்மீர் மற்றும் இமாலயப் பிரதேசத்தில் இருந்து, 7 பிரிசெப்டர்கள் உட்பட, 24 பேர் பதிவு செய்திருந்தனர். ஒவ்வொருவருக்கும், ஒரு வாரம் முன்னதாகவே ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டது. டில்லியில் இருந்து வந்த நான்கு உறுப்பினர்கள் நிகழ்ச்சியை நடத்தினர். அவர்கள் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் பலம் மற்றும் பலவீனம், அவர்களின் பேச்சாற்றல் மேம்பாட்டுக்கான உபாயங்களைப்பற்றியும், தெரிவித்தனர். இந்த பயிற்சி முகாம், தங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவியதுடன், சகஜமார்க்கத்தைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்வதற்கும் அளவிலாத மதிப்பு வாய்ந்ததாக இருந்ததை உணர்ந்தனர்.




# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா

Centres of Light

ஜனவரி 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 1









## ஷாஜஹான்பூர் ஆசிரமம்

ஷாஜஹான்பூர் ஆசிரமமானது, பாபுஜி தன் மாஸ்டராகிய, ஃபதேகரைச் சேர்ந்த லாலாஜி மகராஜுக்கு அளித்த, அன்புக் காணிக்கைகளில் ஒன்றாகும். பாபுஜி, ஆசிரமத்திற்கு ஏற்ற நிலம் வாங்குவதில் இருந்து கட்டிட நிர்மாணம் வரை அனைத்திலும் மிகுந்த ஆர்வம் எடுத்துக் கொண்டார். "ஷாஜஹான்பூர் -- சகஜ மார்க்க முறை பிறந்த இடம்" என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்ட ஒரு சலவைக்கல்லை ஆசிரம நிலத்தில் நாட்டுவதற்கு, தானே முன்னின்று ஏற்பாடு செய்தார். ஷாஜஹான்பூர் ரயில் நிலையத்திலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவிலும், பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவிலும், இந்த ஆசிரமம் அமைந்துள்ளது.

ஷாஜஹான்பூர் ஆசிரமம், பதினைந்து ஏக்கர் பரப்பளவிலும், ஷாஜஹான்பூர் - ஹர்தோய் சாலை சந்திப்பிலும், மேலும் தேசிய நெடுஞ்சாலை எண். 24லிலும், அமைந்துள்ளது. "த்யான் கக்ஷ்" என்று அழைக்கப்படும் ஆசிரமத்தின் தியானக்கூடம், பாபுஜி அவர்கள் மேற்பார்வையில், 1973லிருந்து, 1976க்குள் கட்டப்பட்டது. 1976 பிப்ரவரி 5ம் தேதி, பசந்த் விழாவின் போது, பாபுஜி அவர்களால், அவரது மாஸ்டர் லாலாஜி அவர்களுக்கு அதிகாரபூர்வமாக அர்ப்பணிக்கப்பட்டது.

தியானக்கூடத்தில், எண்ணூறு அப்யாசிகள் அமர்ந்து கொள்ளலாம். உள்ளடங்கிய மூன்று தாழ்வாரங்களும், கிழக்குப் பகுதியில் ஒரு மேடையும் உள்ளன. மேடையின் பின்னால் உள்ள சுவற்றில், கனடா நாட்டைச் சேர்ந்த அப்யாசி ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட, வண்ணக் கண்ணாடியால் ஆன மிஷனின் அடையாளச்சின்னம் பதிக்கப்பட்டுள்ளது. இச்சின்னம், கிழக்கு முகமாக அமைந்திருப்பதால், உதயமாகும் சூரிய ஒளியுடன், நிறங்களை மாற்றிக் கொள்கிறது. மிகவும் கவர்ந்திழுக்கும் தளத்தின் பச்சை நிற சலவைக்கற்கள், அகமதாபாத் அருகில் உள்ள, அம்பாஜி குன்றுகளில் இருந்து கொண்டு வரப்பட்டன. குளிர் காலத்தில் மிதமான வெப்பமாகவும், கோடையில் குளிர்ச்சியாகவும், இயற்கையாகவே இருக்குமாறு இக்கூடம் திட்டமிடப்பட்டுள்ளது. கூடத்தைச் சுற்றிலும் வெளிப்புறம் உள்ள மேடையின் தளம் சிவப்பு ஆக்ரா கற்களாலும், வெளிப்புறச் சுவர், வெண்மையான ஆக்ரா கற்களாலும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு எளிமையான இரு தளக் கட்டிடத்தில், சகோதர, சகோதரி அப்யாசிகள் தங்குவதற்கான இரு அறைகள் கீழ் தளத்திலும், மேல் தளத்தில் பதினான்கு அறைகளும் உள்ளன. அந்த அறைகளில் ஒன்று, பாபுஜி அவர்களால், அவர் தந்தை ராய் பகதூர் ஸ்ரீ பத்ரி ப்ரசாத்ஜி அவர்கள் நினைவாகவும், மற்றொன்று, சாரிஜி அவர்களால் அவர் அன்னை ஜானகியின் நினைவாகவும் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

மேலும் ஆசிரமத்தில், பாபுஜி மகராஜ் அவர்களின் சமாதி, ஒரு விஸ்தாரமான சமையல் அறை, மற்றும் உணவு கூடம் ஆகியவையும் உள்ளன. தியானக் கூடத்தின் ஒருபுறம் பாபுஜியின் அறையும், மறுபுறம் மாஸ்டரின் அறையும் உள்ளன.

ஆசிரமத்தின் மேற்குப்பகுதியில், இரு முக்கிய வாயில் கதவுகளுக்கு நடுவில் ஒரு பெரிய நீரூற்று உள்ளது. அதில் உள்ள முக்கோண வடிவத்தூணில், சிவப்புக் கற்களாலும் சுற்றிலும் தாமிரத் தகடுகளாலும் ஆன, மிஷனின் அடையாளச்சின்னமும், அதைச்சுற்றிலும் வண்ண நீரூற்றும் உள்ளன. நீரூற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள நான்கு வளைவுகள், அதன் கட்டிட அமைப்பின் அழகை மேலும் உயர்த்திக் காட்டுகின்றன.

ஆசிரம வளாகத்தில், பசுமையான அடர்ந்த புல்வெளிகள், மரங்கள், மற்றும் செடிகொடிகள் நிறைந்துள்ளன. அதனால் பல வகையான பறவைகள் கவரப்பட்டு இங்கு வருகின்றன. பாபுஜி மகராஜ் அவர்களால் நடப்பட்ட காதம் மரமானது, கடந்த முப்பத்து மூன்று வருடங்களாக செழிப்பாக வளர்ந்து வருகிறது.





**To subscribe to this Newsletter please visit**
**http://www.srcm.org/centers/as/in/newsletter/index.jsp**
**For feedback, suggestions and news articles please send email to**
**in.newsletter@srcm.org**


© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved.
"Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.
This Newsletter is intended exclusively for the members of SRCM.




Page 9